1967 நவம்பர் 24]

கழகத்தின் Life Insurance Corporation சம்பளச் சேமிப்புத் திட்டத்தை (அதாவது அவர்களுடைய சம்பளத்திலிருந்து காப்புறுதித் தவணைத் தொகை பிடித்துக் கொள்ளும் திட்டத்தை) செயல்படுத்திப் பார்க்குமாறு அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Consequent on this Government order, have there been instances where the non-gazetted Government Officers have taken out policies from the Life Insurance Corporation and contributed the premia from their salaries, and how many such instances were brought to the notice of the Government?

THE HON. THIRU C. N. ANNADURAI : I do not have details about such incidents.

திரு. கரு. சீமைச்சாமி : அரசாங்க உத்தியோகஸ்தர்கள் ஏற்கனவே எடுத்திருக்கும் பாலிசிகளையும் இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதுபற்றி பரிசீலித்துப் பதில் சொல்கிறேன்.

Manufacture of infant food

* 414 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government have proposed to set up a factory for the manufacture of food for infants and invalids?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : குழந்தைகள்-நோயாளிகள் உணவு தயாரிப்பதற்குரிய தொழிற்சாலை ஒன்றை உதகையில் நிறுவுவது பற்றிய திட்டம் ஒன்று அரசாங்கத்தின் ஆலோசனையில் இருந்து வருகிறது. அது இன்னும் தொடக்க நிலையிலேயே இருந்து வருகின்றது.

திரு. ஏ. எம். ராஜா : சட்டமன்றத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான பால் உணவு தட்டுப்பாடு அதிகரித்து வருவதாலும், தேவை மிகுதிப்பட்டிருப்பதையும் உத்தேசித்து அந்தத் தொழிற்சாலை ஏற்படுவதை விரைவுபடுத்த அரசாங்கம் முன்வருமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, குழந்தைகளுக்கான பால் உணவு தயாரிப்பில் இந்த அரசு 1957-ஆம் ஆண்டில் இருந்தே அதிக கவனம் காட்டி வருகிறது. ஆனால் அப்படி ஒரு தொழிற்சாலை இங்கே நிறுவ வேண்டும் மென்றால் பத்தாயிரம் லிட்டர் பால் ஒரு நாளைக்குத் தேவைப்படுகிறது. ஒவ்வொரு தினமும் பத்தாயிரம் லிட்டர் பாலை எங்கே மிச்சப்படுத்தி எப்படிக் கொடுப்பது என்பது தான் பிரச்சினை. டென்மார்க்கைச் சேர்ந்த ஒரு கம்பெனி ஒன்று பண உதவி, தொழில் உதவி எல்லாம் அளிப்பதாக முன் வந்தது.

இருந்தும் அந்தத் தொழிலை நிறைவேற்ற முடியாமல் பின்தங்கி விட்டார்கள். இப்போது லெப்டினன்ட் கர்னல் முராரி என்பவர் நீலகிரி மாவட்டத்தில் பால் அதிகம் கொடுக்கக்கூடிய மாட்டுப் பண்ணையை ஏற்படுத்தி, அங்கே பால் பவுடர் தயாரிக்கும் தொழிற் சாலையை ஏற்படுத்த முன்வந்திருக்கிறார். இதற்காக 169 லட்சம் ரூபாயில் ஒரு திட்டத்தைத் தயாரித்திருக்கிறார். பால் உற்பத்திக்காக 86 லட்சம் ரூபாய்த் திட்டமும், பால் மாவு உற்பத்திக்காக 83 லட்சம் ரூபாய்த் திட்டமும் கொடுத்துள்ளார். இப்போது அது பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய சர்க்காருக்கு அனுமதி கோரி விண்ணப்பித்துக் கொள்ளுமாறு கேட்டிருக்கிறோம். அந்தத் திட்டத்தை ஆரம்பிக்க ஆயிரம் ஏக்கர் நிலம் தேவை என்று கோரி யிருக்கிறார்.

Dr. H. V. HANDE: Baby food has become a very serious problem. The black market price of baby food has gone so high that poor children are finding it very difficult to get baby food. Will this Government come forward to conduct a market survey as to the quantity of baby food that is required for the whole State and the quantity that is available in the State, find out the difference and take steps for the proper distribution of the available quantity?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: குழந்தைகளுக்கான பால் உணவுத் தேவை அதிகம் என்பதை அரசாங்கம் உணருகிறது. சாதாரணமாக சென்னைக்கு நாள் ஒன்றுக்கு 75 ஆயிரம் லிட்டர் தேவைப்படுகிறது. 35 ஆயிரம் லிட்டர் கூடச் சப்ளை செய்ய முடிய வில்லை. ஈரோடு முதலிய இடங்களில் இருந்தெல்லாம் கொண்டு வரப்படுகிறது. தேவைக்குப் போதுமானதாக இல்லை. இந்த நிலையில் பால் பவுடர் உற்பத்திக்கு பாலைத் திருப்பிவிட்டால் பெரும் நெருக்கடி ஏற்படும், கொஞ்ச காலத்திற்கு இந்தத் திட்டத்தைத் தள்ளிப் போடவேண்டும் என்று பால் கமிஷனர் கூட தெரிவித் திருக்கிறார். ஆக பால் உற்பத்தியிலும் கவனம் செலுத்தியாக வேண்டும்.

திரு. நா. கிருட்டிணன்: குழந்தைகளுக்கான பால் உணவை உரிய விநியோகக் கடைகளில் சென்று கேட்கிறபோது இல்லை என் கிறார்கள். ஆனால் வேறு கடைகளில் அதிக விலை கொடுத்தால் கொடுக்கிறார்கள். இது அரசாங்கத்திற்குத் தெரியுமா? இதைத் தடுக்க என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: இந்தக் கேள்வி என்னுடைய துறையைப் பொருத்தது அல்ல. இருந்தாலும் இது பற்றிய விவரங்களை எழுதி அந்தத்துறை அமைச்சருக்கு அனுப் பினால் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என்பதைப் பற்றி யோசிக்க முடியும்.

திரு. கே. பி. எஸ். மணி: இப்போது பாலைப் பொருத்தவரை தஞ்சை மாவட்டத்தில் இருந்துகூட வரவழைக்க வேண்டியதாக இருக்கிறது. ஆகவே வெளிநாடுகளில் இருந்து பால் இறக்குமதி

1967 நவம்பர் 24]

செய்யவும், அதிகம் பால் தரக்கூடிய பசுக்களை இறக்குமதி செய்ய வும் இந்த அரசாங்கம் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே நான் குறிப்பிட்டேன். இந்த 169 லட்சம் ரூபாய்த் திட்டத்தில் 86 லட்சம் ரூபாய் பால்பண்ணையை அங்கே உருவாக்குவதற்காகவே திட்டமிடப்பட்டுள்ளது. பால் உற்பத்தியை அதிகப்படுத்து வதிலும் அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

சிறிய கார் தயாரிக்கும் திட்டம்

* 415 வினா.—திரு. ஏ. எம். ராஜா :
திரு. கே. விநாயகம் :
திரு. வை. சுவாமிநாதன்: } மதிப்பிற்குரிய கல்வி, தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சிறிய கார் தயார் செய்யும் திட்டம் தமிழக அரசுக்கு உண்டா ?

(இ) இது குறித்து தனியார் துறையிலிருந்து அனுமதி கோரி விண்ணப்பம் ஏதேனும் தமிழக அரசுக்கு வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இல்லை.

திரு. ஏ. எம். ராஜா : சட்ட மன்றத் தலைவர் அவர்களே, நாட்டில் சிறிய கார்களின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாலும், கார்களின் விலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வரு வதை முன்னிட்டும், நாட்டிலே பலருக்குத் தொழில் வாய்ப்புகள் ஏற்படுகின்ற காரணத்தை முன்னிட்டும், தமிழகத்தில் சிறிய கார் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஏற்படுத்துவதற்காக மத்திய சர்க்காரை தமிழக அரசு வற்புறுத்த முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறிய கார் உற்பத்தி செய்ய வேண்டுமென்ற முயற்சிகள் இந்தியாவின் பல்வேறு மாநிலங்களாலும் எடுத்துக்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அதைப்பற்றி முடிவுசெய்ய வேண்டிய பொறுப்பு மத்திய அரசிடம் இருக்கிறது. மத்திய அரசு அதிலே திட்டவட்டமான முடி வொன்றும் இன்னும் எடுக்கவில்லை. கார் செய்வதற்கான அனுமதி கிடைக்கின்ற வாய்ப்பு இருக்குமானால், அதைச் செய் வதற்கான தூண்டுதலைச் செய்து வேண்டியவற்றைச் செய்ய அரசு முயற்சி செய்யும். ரங்கூனிலிருந்து திரு. என். கே. பிள்ளை என்பவர் இதற்கான விருப்பம் தெரிவித்திருப்பதாக ஒரு கடிதம், கையொப்பமிடாத கடிதம் ஒன்று வந்திருக்கிறது. அதிலே செய்வதற்கான முறை பற்றி திட்ட வட்டமாக, தெளிவாக எதுவும் சொல்லப்படவில்லை. இந்திய அரசாங்கத்தின் அனுமதி கிடைத் தால் முறைப்படி இதற்காக விண்ணப்பம் யாராவது செய்வார் களானால் அதற்கான முயற்சியை இந்த அரசு செய்யும்.